بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 1:11, ஷ.்பான், 1426, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, e-mail : suvanam@gmail.com

# இந்தியாவைக் கலவர பூமியாக்க வரும் நிதி

அன்பு வாசகர்களுக்கு ஓர் அதிர்ச்சியூட்டும் தகவல்!!! கடந்த 10.7.2005 அன்று தேதியிட்ட குமுதம் ரிப்போர்ட்டர்" வாரஇதழில் ***வகுப்புக் கலவரங்களுக்கு வரும் நிதி: சிதம்பரம் என்ன செய்யப் போகிறார்?*** என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையை அப்படியே இங்கே தருகிறோம்.

## உள்ளே...

ஷ.்பான்-15, பராஅத் இரவா? - 3

மீண்டும் ஒரு ஹிரோஷிமா... 5

முஸ்லிம்களும் ஊடகங்களும் - 6

இரத்த அழுத்தம் - 8

இராஜ நாகம் மற்றும் கீரிப்பிள்ளை - 10

குறுக்கெழுத்துப் போட்டி - 12

இந்தியாவில் செயல்படும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களில் 30,000 அமைப்புகள் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெறுகின்றன. இதில் 16,000 அமைப்புகள் ஆண்டிற்கு ஐந்தாயிரம் கோடி ரூபாய் வரை பெறுகின்றன. இவை மத்திய அரசிற்கு வரவு-செலவைச் சமர்ப்பிக்கின்றன.

இன்னும் 14,000 நிறுவனங்களும் இன்னும் ஓர் ஐந்தாயிரம் கோடி அளவிற்கு நிதியுதவி பெறுகின்றன. ஆனால் எந்தக் கணக்கையும் கொடுப்பதில்லை. யானைக்கு அல்வா, பூனைக்கு பூந்தி வாங்கினோம் என்றுகூட எழுதிக் கொடுப்பதில்லை.

இத்தகைய நிறுவனங்களை வரைமுறைப்படுத்தப் போவதாக மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் தெரிவித்திருக்கிறார். பார்ப்போம்.

இந்துத்வாவின் தலைமைப் பீடமான ஆர்.எஸ்.எஸ். கூட தன்னார்வத்தொண்டு நிறுவனமாம். பிரிட்டனில் பதிவு செய்திருக்கிறார்கள். இன்னும் பல சங்பரிவார அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களாம். வேடம் கட்டிக் கொண்டிருக்கின்றன.

### உலகையே உலுக்கிவிட்ட குஜராத் பூகம்பம், கரைதாண்டி வந்த கடல் மாதா ஒரிசாவில் ஏற்படுத்திய பேரழிவு

இந்த இயற்கையின் சீற்றங்களால் இடிந்துபோன மக்களுக்கு பிரிட்டனில் உள்ள ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அமைப்பு நிதி திரட்டியது. இந்தியாவில் எத்தனை சங்பரிவார அமைப்புகள் உண்டோ அத்தனைக்கும் அங்கே கிளைகள் உண்டு. நாமகரணம் மட்டும் சற்று வேறுபடும்.

*தொடர்ச்சியை 4-ம் பக்கம் பார்க்க...*

# அழைப்பாளர்களின் பண்புகள்

**- *K.L.M . இப்ராஹீம் மதனி. M.A***

கடந்த இதழில் அழைப்பாளர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய மார்க்க கல்வி தொடர்பாக அறிந்து கொண்டோம் மேலும் இந்த இதழில் அதன் தொடர்ச்சியை காண்போம்.

**6. ஹிக்மத் என்னும் சாதுரியம்**

அழைப்புப் பணியின் போது மற்றவர்களோடு ஹிக்மத்தாகவும் (சாதுரியமாகவும்) மென்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ அதைக் கொண்டு அவர்களுடம் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன் அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்க அறிந்தவன், இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன். (அல்குர்ஆன் 16: 125)

மற்றவர்களுடன் விவாதிக்கும் போது மென்மையைக் கையாள வேண்டும். மற்றவர்களை ஏசுவது, தூற்றுவது, கடினமான வார்த்தைகளைப் பேசுவது போன்றவைகளை முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும். மென்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம்தான் வெற்றியைப் பெற முடியும். இன்னும் நாம் எடுத்துச் சொல்லும் செய்தியை மிகத்தெளிவாகவும் உரிய ஆதாரங்களுடனும் எடுத்து வைக்கும் போது உண்மை எது தவறு எது என்பதை மக்கள் எளிதாக விளங்கிக் கொள்வார்கள்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

**(நபியே!) என் அடியார்களுக்கு அவர்கள் அழகியதையே சொல்ல வேண்டும் என்று கூறுவீராக! நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் (தீயதைத் தூண்டி) விஷமஞ் செய்வான் நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான பகைவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 17: 53)**

அதாவது தவறான வழியில் நடப்பவர்களிடம் விவாதம் செய்ய நேரிட்டால் அவர்களுடனும் நல்ல வார்த்தைகளைப் பேசி விவாதிக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். மற்ற மதத்தவர்களுடன் விவாதிக்கும் போதும் அழகிய முறையில் விவாதிக்க வேண்டும். அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

இன்னும், நீங்கள் வேதத்துடையவர்களுடன் அவர்களில் அக்கிரமமாய் நடப்பவர்களைத் தவிர்த்து, (மற்றவர்களுடன்) அழகிய முறையிலேயன்றித் தர்க்கம் செய்யாதீர்கள்

**"எங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் உங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் நாங்கள் ஈமான் கொள்கிறோம் எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஒருவனே - மேலும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபட்டு, நடப்போர் (முஸ்லிம்கள்) ஆவோம்" என்று கூறுவீர்களாக. (அல்குர்ஆன் 29: 46)**

இன்னும் அல்லாஹ் கூறுகின்றான்

அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர் (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள் எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்தி விடுவீராக அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும் பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பு ஏற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பு ஏற்படுத்துவோரை நேசிக்கின்றான். (அல்குர்ஆன் 3: 159)

மனிதர்களின் அறிவுக்கு ஏற்றவாறு பேசுங்கள் அல்லாஹ்வும் அவனின் தூதரும் பொய்ப்படுத்தப் படுவதை நீங்கள் விரும்புகின்றீர்களா? என அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள். (புகாரி)

### 7. விமர்சனங்களை பொருட்படுத்தலாகாது

நாங்கள் எங்கிருந்த போதும் உண்மையைக் கூறுவோம் என்றும் அல்லாஹ்வின் மார்க்கத்தைக் கூறும் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்பை பொருட்படுத்த மாட்டோம் என்றும் நபி (ஸல்) அவர்களிடம் நாங்கள் பைஅத்து (உடன்படிக்கை) செய்திருக்கின்றோம் என உப்பாதா இப்னு ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆகவே நாங்களும் மார்க்கப்பணியில் ஈடுபடும் போதும், உண்மையை எடுத்துரைக்கும் போதும் பலர் நம்மைப்பற்றி பலவாறாகவும் விமர்சிக்கலாம். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் நமது பணியைத் தொடர வேண்டும். அழைப்பாளர் என்பவர் ஒரு மருத்துவரைப் போன்றவர், மருத்துவர் நோயாளியின் நிலையை அறிந்து அதற்கேற்றவாறு மருந்தைக் கொடுப்பார். அவ்வாறே அழைப்பாளரும் மக்களின் நிலைகளை அறிந்து அவர்கள் செய்யும் தவறுகளை திருத்துவதற்கு முன்வர வேண்டும்.

### 8. மக்கள் சடைவடையும் அளவுக்கு பேசக்கூடாது

நாங்கள் சடைவடைந்து விடுவோமோ என்பதைப்பயந்து சில நாட்கள் விட்டு நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு உபதேசம் செய்வார்கள். (நஸாயி)

அபூவாயில் என்னும் நபித்தோழர் கூறுகின்றார்கள். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது(ரலி) அவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் எங்களுக்கு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். நாங்கள் கூறினோம், அல்லது அவர்களுக்கு கூறப்பட்டது. அபூஅப்துர் ரஹ்மான் அவர்களே! உங்களின் சொற்பொழிவைக் கேட்க எங்களுக்கு மிகவும் விருப்பமாக இருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு நாளும் எங்களுக்கு நீங்கள் சொற்பொழிவு செய்ய நாங்கள் விரும்புகின்றோம் எனக் கூறினோம். அப்போது அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது(ரலி) அவர்கள் கூறினார்கள், நீங்கள் சடைவடைந்து விடுவீர்கள் என்றுதான் நான் அவ்வாறு செய்யவில்லை, நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு விட்டு விட்டு உபதேசம் செய்தது போல் நானும் உங்களுக்கு விட்டு விட்டு உபதேசம் செய்கின்றேன் எனக் கூறினார்கள். (அஹ்மத்)

### 9. தவறைக் காணும் போது மூன்று முறைகளில் ஒன்றை கையாள வேண்டும்

(அ) கையால் தடுப்பது. இது குறிப்பிட்டவர்களுக்கே பொருந்தும். தந்தை தன் பிள்ளையை கட்டுப்படுத்துவது, அரசர் தன் பிரஜைகளை, இவ்வாறு....)

(ஆ) நாவால் தடுப்பது

(இ) மனதால் வெறுப்பது

உங்களில் யார் தவறைக் காணுகின்றார்களோ அதை கையால் தடுக்கட்டும், அதற்கு முடியவில்லையென்றால் நாவால் தடுக்கட்டும், அதற்கும் முடியவில்லையென்றால் மனதால் வெறுக்கட்டும் அதுதான் ஈமானின் குறைந்த அளவு என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்)

### 10. அழைப்பாளர் நல்லொழுக்கம் உள்ளவராக இருக்க வேண்டும்

உண்மை உரைத்தல், நம்பிக்கை, மற்றவர்களுக்கு உபகாரம் செய்தல், இறையச்சம், பொறுமை, அன்பாகப் பழகுதல், மென்மை, வாக்குறுதியை நிறைவேற்றல் போன்ற நற்குணமுள்ளவராக இருக்க வேண்டும்.

(நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (இரக்கமுள்ளவராக) நடந்து கொள்கிறீர். மேலும் சொல்லில் கடுகடுப்பானவராக இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள். ஆகவே அவர்(களின் பிழை)களை நீர் மன்னித்து (அல்லாஹ்விடம்) அவர்களுக்காக மன்னிப்புக் கோருவீராக (அல்குல்ஆன் 3: 159)

(நபியே!) நிச்சயமாக மகத்தான நற்குணத்தின் மீதும் நீர் இருக்கின்றீர் (அல்குர்ஆன் 68: 4)

### 11. அழைப்பாளர்களின் பொதுவான தகுதிகள்

⇒ பணிவு, தான் குறைவுள்ளவன் என்று எண்ணுவது, தற்பெருமை அடிக்காமல் இருப்பது. (இப்பண்புகள் இல்லாதவராக அழைப்பாளர் இருந்தால் அவரை விட்டும் மக்கள் ஒதுங்கி விடுவார்கள்.)

⇒ தான் கற்ற அறிவை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் கஞ்சத்தனம் காட்டக் கூடாது. யார் கற்ற அறிவை மறைக்கின்றாரோ மறுமையில் நெருப்பினால் அவருக்கு கடிவாளம் இடப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

⇒ கண்ணியமாக இருக்க வேண்டும், வீண் விளையாட்டுக்களிலும் தேவையில்லாத பேச்சுக்களிலும் ஈடுபடுவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதே போல் வீணர்களுடன் பழகுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

⇒ தூய்மையான ஆடையை அணிவதுடன் நல்ல தோற்றத்திலும் மக்கள் மத்தியில் தோற்றமளிக்க வேண்டும்.

⇒ ஹராமான செயல்களை முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும். சந்தேகத்திற்கு உரியவைகளை விட்டும் தூரமாகிக் கொள்ள வேண்டும்.

⇒ உள்ளும், வெளியும் ஒன்று போல் இருக்க வேண்டும். தக்வா என்னும் இறையச்சம் குடிகொண்டவராக இருக்க

வேண்டும். அல்லாஹுவை அதிகம் அஞ்சக்கூடியவராக இருக்க வேண்டும்.

⇒ கெட்ட பழக்கங்களிலிருந்து முற்றாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

⇒ பொறுமை என்ற பண்பு அவரின் தனி வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் பிரியாத ஒன்றாக இருக்க வேண்டும்.

**(நபியே!) நம் தூதர்களில் திட சித்தமுடையவர்கள் பொறுமையாக இருந்தது போல், நீரும் பொறுமையுடன் இருப்பீராக! இவர்களுக்காக (வேதனையை வரவழைக்க) அவசரப்படாதீர்! (அல்குர்ஆன் 46: 35)**

காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களை சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கின்றார்களே அத்தகையோரைத் தவிர. (அல்குர்ஆன் 103: 1-3)

ஆகவே, இந்தப் பண்புகளை நாமும் பெற்று உண்மையான அழைப்பாளர்களாக மாறுவோம். அல்லாஹ் அதற்கு வாய்ப்பளிப்பானாக!

# ஷஃபான்-15, பராஅத் இரவா?

பாவங்களைத் தடுக்கக்கூடிய கேடயம் நோன்பாக இருக்கின்றது. தனிமையிலும் அல்லாஹுவிற்கு அஞ்சும் இறையச்சத்தை அதிகப்படுத்துவது நோன்பு, இரக்க சிந்தனை, மனக்கட்டுப்பாடு போன்ற உயர்பண்புகளுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் கடமையான நோன்பின் மாதம் ரமலானை எதிர்நோக்கியவர்களாக இருக்கின்றோம்.

நபி(ஸல்) அவர்கள் கடமையான நோன்புகளை நோற்பதோடல்லாமல் ஷவ்வால் மாத ஆறு நோன்புகள், வியாழன், திங்கள் ஆகிய வார நோன்புகள் நோற்பது, ஆஷுரா, அர∴பா போன்ற நோன்புகள் நோற்றுயிருக்கிறார்கள். மேலும் நபி(ஸல்) அவர்கள் ஷ∴பான் மாதத்தில் ஏனைய மாதங்களைவிட அதிகமான நோன்புகள் நோற்றிருக்கிறார்கள் என்பதை கீழ்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

நபி(ஸல்) அவர்கள் ரமலானைத் தவிரவுள்ள வேறு எந்த மாதத்தையும் முழுமையாக நோன்பு நோற்றதை நான் கண்டதில்லை. அவ்வாறே ஷ∴பான் மாதத்தை தவிர வேறு எந்த மாதங்களிலும் அதிகமாக அவர்கள் நோன்பு நோற்றதையும் நான் பார்த்ததில்லை - அறிவிப்பாளர் : ஆயிஷா(ரலி) அவர்கள், ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு ஷ∴பான் மாதத்தில் அதிகமான நோன்பு நோற்றதன் ரகசியத்தை கீழ்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

நான் நபி(ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! ஷ∴பான் மாதத்தில் நீங்கள் நோன்பு நோற்பதைப் போன்று ஏனைய மாதங்களில் நீங்கள் நோன்பு நோற்பதை நான் காணவில்லையே! என்று கேட்டேன். அதற்கவர்கள், அது ரஜபுக்கும், ரமலானுக்கும் இடையில் வரும் மாதமாகும். இம்மாதம் பற்றி மக்கள் கவனயீனமாக இருக்கின்றார்கள். இம்மாதத்தில் அடியார்களுடைய அமல்கள் அல்லாஹ்விடம் எடுத்துக் காட்டப்படுகின்றன. இம்மாதத்தில் நோன்புடன் இருக்கும் நிலையில் எனது அமலும் அல்லாஹ்விடம் எடுத்துக் காட்டப்பட வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன் எனக் கூறினார்கள். அறிவிப்பாளர் : உஸாமா(ரலி) , ஆதாரம் : அபுதாவூத், நஸஈ, ஸஹீஹ் இப்னு ஹுஸைமா

ஷா∴பான் மாதத்தில் நபி(ஸல்) அவர்கள் அதிகமாக நோன்பு நோற்றிருக்கிறார்கள். அம்மாதத்தில் அடியானின் அமல்கள் அல்லாஹ்விடம் எடுத்துக்காட்டப்படுகின்றன. மேலும் ஷ∴பான் மாத நோன்புகள் ரமலான் மாத கடமையான நோன்புகளுக்கு ஒரு பயிற்சியாகவும் அமைந்துவிடுகின்றன. பசி, தாகம் போன்ற உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் மனக்கட்டுப்பாடு அதில் கிடைத்துவிடுகிறது. இந்த அடிப்படையில் நாமும் அம்மாதத்தில் நோன்பு நோற்றால் அல்லாஹ்விடத்தில் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். அல்லது ஒவ்வொரு மாதம் பிறை 13, 14, 15 ஆகியதினங்களில் நோன்பு நோற்பதை வழமையாகக் கொண்டிருந்தால் ஷ∴பான் மாதமும் பிறை 15 அன்று நோன்பு நோற்பதில் தவறில்லை.

மாறாக நம் நாடுகளில் மக்கள் குறிப்பாக ஷ∴பான் மாதத்தின் 13, 14, 15-ஆம் நாள் இரவு "பராஅத் இரவு" என்று வணங்கி வருகிறார்கள். அன்று இரவு பள்ளியை வர்ண விளக்குகளால் அலங்கரித்து, இரவு முழுவதும் தொழுது, பகலில் நோன்பு நோற்பதை வணக்கமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். "பராஅத்" இரவு அன்று தொழுது வணங்கினால் அல்லாஹ் நம்முடைய பாவங்களை மன்னிப்பான், உணவு, பொருளாதாரம் போன்றவைகளை பெருக்கிக் கொடுப்பான் என்று கருதி அன்றுமட்டும் விசேஷமாக தொழுவதும், பகலில் நோன்பு இருப்பதும் நம்முடைய சமுதாயத்தில் சிலர் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

பராஅத் இரவு அன்று மட்டும்தான் அடியானின் அமல்களை அல்லாஹ் காண்கின்றான் என்றும், அன்றுதான் அடியார்களின் உணவு, பொருளாதாரம் மற்றும் அந்த ஆண்டில் மரிப்பவர்கள் மற்றும் பிறப்பவர்களை தீர்மானிக்கின்றான் என்றும் அன்று விசேஷத் தொழுகைகளை தொழுது வருகிறார்கள்.

அன்று இரவு ம∴ரிபுக்கும் இஷாவுக்குமிடையில் சூரா யாஸீனை ஓத வேண்டுமெனவும், அவ்வாறு ஓதவதால் ஆயுள் நீளமாக்கப்படுகிறது. ரிஸ்க் விஸ்தீரணமாக்கப்படுகின்றது. பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன போன்ற பலவிதமான பயன்கள் கிடைக்கின்றன எனத் தவறாகக் கருதிவருகின்றனர். இது முற்றிலும் நபி(ஸல்) அவர்கள் வழிமுறைக்கு மாற்றமான செயலாகும் (பித்-அத்தாகும்).

பராஅத் இரவில் தொழுவதும், அன்று பகல் நோன்பு இருப்பதும் சுன்னா என்ற பெயரில் பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இந்த நாளுக்கு இப்படியொரு பெயரை அல்லாஹ்வோ, அவனது தூதர்(ஸல்) அவர்களோ சூட்டியதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

அவ்விரவுக்குச் சிறப்பிருப்பதாகக் கருதிச் செய்யப்படும் தொழுகை, பிரார்த்தனை போன்ற வணக்கங்கள் கண்ணியத்திற்குரிய இமாம்களாலும், இஸ்லாமிய அறிஞர்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன. அஷ்ஷெய்க் முஹம்மது அப்துஸ்ஸலாம் ஹிழ்ர் அஷ்ஷுகைரி என்ற அறிஞர் தமது அஸ்ஸுனன்

வல்முப்ததஆத் அல்முதஅல்லகா பில் அத்காரி வஸ்ஸலாத் என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்கள்:

ஷஃபான் மாதத்தின் 15 ஆம் நாள் இரவு வந்தால் அவ்விரவில் நீங்கள் நின்று வணங்கி, பகலில் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள் (அல்ஹதீஸ்).

இப்னு அபீ பஸ்ரா என்பவர் இதன் அறிவிப்பாளர் வரிசையில் இடம் பெறுவதால் இது ஏற்றுக்கொள்ளப்படாத ஹதீஸாகும். இமாம்களான அஹ்மத்(ரஹ்), இப்னு முஈன் (ரஹ்) ஆகியோர் இந்த இப்னு அபீ பஸ்ரா என்பவர் ஹதீஸ்களை இட்டுக்கட்டக் கூடியவர் எனக் கூறியுள்ளார்கள். மேலும் பராஅத் இரவுத் தொழுகை பற்றி வந்துள்ள ஹதீஸ் பாத்திலானது (தவறானது) என இமாம் ஹாபிழ் அல் இராக்கீ(ரஹ்) தமது அல்மௌழூஆத் (இட்டுக்கட்டப்பட்டவைகள்) எனும் நூலில் குறிப்பிடுகின்றார்கள்.

ரஜப் மாதத்தில் மிஃராஜுக்கென உருவாக்கப்பட்ட தொழுகையும், ஷஃபானின் பராஅத் தொழுகையும் மிக மோசமான, வெறுக்கத்தக்க இரு பித்அத்களாகும் என இமாம் நவவி(ரஹ்) அவர்களும் குறிப்பிடுகின்றார்கள்.

**எனவே பராஅத் என்றொரு இரவு இல்லை என்பதும் அதற்கு எவ்வித சிறப்புக்களுமில்லை என்பதும் நாம் தெளிவாக அறியமுடிகின்றது. எனவே பராஅத் என்ற அடிப்படையில் நோன்பு நோற்று அமல்கள் செய்வதைவிட்டும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக!.**

---

*முதல் பக்கத் தொடர்ச்சி (இந்தியாவை...)*

இந்த அமைப்புகள் திரட்டிய நிவாரண நிதி, லட்சங்கள் அல்ல. பலப்பல கோடிகள். அத்தனை கோடிகளும் இந்தியா வர பிரிட்டன் அனுமதித்தது. அவ்வளவு பெரிய தொகை இங்கே எப்படிப் பயன்படுத்தப்பட்டது?

ரோஜாத் தோட்டம் போடுவதற்காக இத்தனை கோடி நிதியை சங்பரிவாரங்கள் பயன்படுத்தவில்லை. கள்ளிக்காடுகளை வளர்ப்பதற்குத்தான் பயன்படுத்தின.

இந்து தீவிரவாதம் வளருவதற்கு உரமாகப்பயன்படுத்தப் பட்டன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் செயல்படும் தொண்டு நிறுவனங்களின் பணியை ஒரு குழு கண்பாணிக்கிறது. அதன் பெயர் அசாவ் (ASAW) என்பதாகும். அந்தக் குழுவினர் இந்தியா வந்தனர். பிரிட்டனில் திரட்டப்பட்ட நிதி இங்கே எப்படிச் செலவு செய்யப்பட்டது என்பதனை ஆராய்ந்தனர். அதிர்ச்சியடைந்தனர்.

'BRITISE CHARITY-HINDU EXTREMISM' என்ற தலைப்பில் அந்த அமைப்பினர் 80 பக்க அறிக்கையை பிரிட்டிஷ் மேல்சபையில் சமர்ப்பித்தனர். ஆர்.எஸ்.எஸும் இதர சங்பரிவார அமைப்புக்களும் தொண்டு நிறுவனங்கள் அல்ல. இந்து தீவிரவாத அமைப்புக்கள், எனவே, அனுமதிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் பட்டியலிலிருந்து இவை நீக்கப்பட வேண்டும் என்று லண்டன் நாடாளுமன்றத்தில் குரலெழுப்பியது.

தாங்கள் லட்சம் லட்சமாகத் தருகின்ற தொகை, கண்ணீரில் தத்தளிக்கம் மக்களுக்காகச் செலவிடப்படவில்லை. மதவெறிப் பணிகளுக்குத்தான் பயன்படுகின்றன என்ற விவரம் அங்கே அள்ளிக் கொடுக்கும் மக்களுக்குத் தெரிவதில்லை. காவித்திரைகள் மறைத்து விடுகின்றன.

குஜராத் வகுப்புக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் திரட்டப்பட்ட தொகையில் ஒரு சிறுதுளிகூட அவர்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. இதனை அந்த அசாவ் (ASAW) விழிப்புணர்வு அமைப்பு வெளிப்படுத்தியிருக்கிறது.

குஜராத்தில் மூட்டிவிடப்பட்ட வகுப்புக் கலவரங்களில் இரண்டாயிரம் சிறுபான்மையினர் கொல்லப்பட்டனர். இரண்டு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு அபலைகளாக முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர்.

இந்தக் கொடூரமான பரிதாப நிலையை ஏற்படுத்தியவர்கள் விஸ்வ ஹிந்து பரிஷத்தினர், ஆர்.எஸ்.எஸ் மற்றும் வனவாசி கல்யாண் சமிதியினர் என்றும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. திரட்டப்பட்ட நிதியெல்லாம் வகுப்பு வெறியைத் தூண்டும் இந்த அமைப்புக்களுக்குத்தான் சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஆமாம் சமுதாய தர்மங்களைச் சாகடித்தவர்களுக்கு பணமுடிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

வசூலித்த கோடிகளில் மூன்றில் ஒரு பங்கு ஆர்.எஸ்.எஸ் பள்ளிகளுக்குச் சென்றது.

குஜராத், ஒரிசா, மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட், சத்தீஷ்கர், ராஜஸ்தான் ஆகிய பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களின் மலைப் பிரதேசங்களில் ஓராசிரியர் பள்ளிகளை ஆர்.எஸ்.எஸ் திறந்திருக்கிறது. ஏசுவின் போதனைகளை இப்படித்தான் அந்தக் காலத்தில் பரப்பினார்களாம். அதே போல் ஆர்.எஸ்.எஸும் "ராம் ராம்" பள்ளிகளைத் திறந்திருக்கிறது.

குஜராத் கலவரத்தின்போது இஸ்லாமிய மக்களைத் தாக்க வனவாசி கல்யாண் சமிதி என்ற மலைவாழ் அமைப்பினரைத்தான் சங்பரிவாரங்கள் பயன்படுத்திக் கொண்டன. அந்தக் கல்யாண் சமிதிகளுக்கு இன்னொரு மூன்றில் ஒரு பகுதிப் பணம் சென்றது.

லோக்கல்யாண் சமிதி, எல்லைப்பகுதி கல்யாண் சமிதி, சேவா பாரதி, உத்கல் (ஒரிசா) பிப்பன்ன சஹாய சமிதி போன்ற அமைப்புகளைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவையெல்லாம் சங்பரிவாரங்களின் தொண்டு நிறுவனங்களும் இவற்றுக்கு மற்றொரு மூன்றில் ஒரு பகுதித் தொகை பரிமாறப்பட்டிருக்கிறது.

சங்பரிவாரங்களின் வன்முறைப் படைக்குப் பெயர் தான் சேவாபாரதி. இதற்கு மட்டும் ஏறத்தாழ ஐம்பது கோடி ரூபாய் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸின் புகழ் பரப்புவது, சிறுபான்மை இன மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்வது, இந்துக் கோயில்கள் கட்டுவது, சமுதாயத்தின் மேல்தட்டினருக்கு சமூகக்கூடங்கள் கட்டுவது, கிறிஸ்துவ எதிர்ப்புப் பிரசாரம் போன்ற இந்துத்வாப் பணிகளுக்கே நிவாரண நிதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் இவர்கள் ஊர் ஊருக்குப் பிள்ளையார் கோயிலிருந்து பெருமாள் கோயில் வரை கட்டுவார்கள். உபந்யாசங்கள் நிகழ்த்துவர். விழா நடத்துவர். இத்தகைய இந்து மதப் பிரசாரத்தை அந்த நாட்டு மக்கள் அனுமதிக்க வேண்டும். ஆனால் இங்கே இவர்கள் எந்த மதப்பிரசாரத்தையும் அனுமதிக்க மாட்டார்கள். மாற்று மதத்தினரை துரோகிகள் என்று வசைபாடுவார்கள்.

சங்பரிவாரங்களின் இருட்டறைக் கணக்குகள் இன்னும் வெளிச்சத்திற்கு வரவில்லை என்று தென்கிழக்கு ஆசிய

நாடுகளுக்கான விழிப்புணர்வுக்குழு தெரிவிக்கிறது. நிதியமைச்சர் சிதம்பரத்திற்கு இதனை விட வேறு என்ன ஆதராங்கள் வேண்டும்? அவையெல்லாம் ஆர்.எஸ்.எஸின் தாழ்வாரங்களில் குவிந்து கிடக்கின்றன.

அண்மைக்காலமாக குஜராத்திலும் ஒரிசாவிலும்தான் சங்பரிவாரங்களின் வன்முறை வெறியாட்டங்கள் அதிகரித்தன. நிவாரணநிதி என்று பிரிட்டனில் திரட்டப்பட்ட நிதி, அத்தகைய அநாகரிக காரியங்களுக்குப் பயன்பட்டிருக்கின்றன.

லண்டனில் அறநிலைய ஆணையம் என்ற ஓர் அமைப்பு செயல்படுகிறது. குஜராத் நிவாரணநிதி என்று பிரிட்டனில் வசூலிக்கப்பட்ட கோடிகள் எப்படிச் செலவு செய்யப்பட்டிருக்கின்றன என்று நேரில் பார்க்க விரும்பியது, ஆனால், வாஜ்பாய் அரசு அவர்களுக்கு விசா வழங்க மறுத்துவிட்டது.

என்றைக்கு வாஜ்பாய் அரசு அமைந்ததோ அன்றிலிருந்து இந்துத்வா தொண்டு நிறுவனங்களுக்கு வந்த உதவிகள் நிறுத்தப்பட்டன. தூய்மையான காந்தீய நிறுவனங்களுக்கு வந்த உதவிகளும் நிறுத்தப்பட்டன. ஆனால் சங்பரிவாரங்களுக்கும், ஆர்.எஸ்.எஸிற்கும் அட்டியின்றிக் கோடிகோடியாகக் குவிய வாசல் கதவுகள் அகற்றப்பட்டன.

ராஜஸ்தான் பி.ஜே.பி. அரசு சுனாமி நிதி திரட்டியது. பதினெட்டு கோடி ரூபாய் சேர்ந்தது. அதில் தமிழகத்தற்குப் பங்குதர விரும்பியது. ஆனால் அதனை ஆர்.எஸ்.எஸ் மூலம்தான் செலவிடுவோம் என்றது. அதனைத் தமிழக அரசு ஏற்கவில்லை.

ஆர்.எஸ்.எஸ் மூலம் செலவு செய்வதென்றால் தங்களுக்கும் நிதி தேவையில்லை என்று அந்தமான் நிர்வாகமும் அறிவித்துவிட்டது.

சுனாமி நிதியைக்கூட ஆர்.எஸ்.எஸிடம் தரவேண்டுமாம். கணக்குக் கேட்க முடியுமா? எப்படிச் செலவு செய்யப்படும் என்று குஜராத்தில் பார்த்து விட்டோம்.

எனவே, வெளிநாடுகளிலிருந்து சங்பரிவாரங்களுக்கு வரும்நிதிக்கு நிதி அமைச்சர் சிதம்பரம் எப்படிக் கணக்கு கேட்கப் போகிறார்? எப்படி வரைமுறைப் படுத்தப் போகிறார்?

அந்தப் பரிவாரங்களுக்காகத் திரட்டப்படும் நிதி என்னென்ன காரியங்களுக்காக எந்தெந்த அமைப்புக்கள் மூலம் செலவு செய்யப்படுகின்றன என்பதைப் பார்த்துவிட்டோம். எனவே இந்தியாவைக் கலவரபூமியாக்க வரும் நிதியை அனுமதிக்க வேண்டுமா?

காலத்தோடு செய்ய வேண்டிய காரியம். நிதியமைச்சர் சிதம்பரம் என்ன செய்யப் போகிறார்?.

நன்றி: குமுதம் ரிப்போர்ட்டர் / 10.7.2005

# மீண்டும் ஒரு ஹிரோஷிமா ஏற்படாமல் இருக்க

ஜப்பானில் ஹிரோஷிமா நகரில் அமெரிக்கா அணுகுண்டு வீசி தாக்குதல் நடத்திய 60வது ஆண்டு நினைவு தினம் 06-08-2005 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. ஜப்பான் சார்பில் அமெரிக்காவுக்கு அழைப்பிதழ் அனுப்பியும் அமெரிக்கா சார்பில் எந்த பிரதிநிதியும் கலந்து கொள்ளவில்லை.

60 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1945 ஆகஸ்ட் 6 காலை 8.15 மணிக்கு அமெரிக்காவின் பி-29 விமானம் ஜப்பானிய நகரமான "ஹிரோஷிமா" மீது உலகின் முதல் அணுகுண்டை வீசியது. இந்த அணுகுண்டுக்குச் சூட்டப்பட்ட பெயர் "குட்டிப் பையன்" (Little boy).



நான்கு லட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த ஹிரோஷிமா நகரின் மையப்பகுதியில் 580 மீட்டர் உயரத்தில் இந்த அணுகுண்டு வெடித்தது. 3 மீட்டர் நீளமும் 71 செ.மீ அகலமும் கொண்ட இந்தக் குண்டின் எடை 4 டன் ஆகும். 12,500 டன் எடை கொண்ட டி.என்.டிக்கு (Trinitro tolune - TNT) இணையான வெடிதிறன் படைத்த இந்த அணுகுண்டு வெடித்ததும் கண்களைக் குருடாக்கும் வெளிச்சம் வான்வெளியில் நிறைந்தது. காற்றின் வெப்பநிலை 7,000 டிகிரி செல்சியசுக்கு உயர்ந்தது.

மணிக்கு 400 கி.மீ. வேகத்தில் சூறாவளி ஊழித் தீயாய்ப் புறப்பட்டது. குண்டு வெடித்த 15 மணித்துளியில் 12,000 மீட்டர் உயரத்திற்கு ராட்சதக் காளானாகக் கதிர்வீச்சுப் புகைமண்டலம் எழுந்து நின்றது. மரங்கள் தீப்பந்தங்களாக எரிந்தன. இரும்புத்தூண்கள் உருகி ஓடின. ஹிரோஷிமாவில் இருந்த 76,000 கட்டிடங்களில் 68 விழுக்காடு சாம்பலாகின. குண்டு வெடித்த ஒரே நிமிடத்தில் 80,000 மனிதர்கள் இறந்தனர். 70,000த்திற்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். இவர்களில் 60,000 பேர் ஓராண்டு முடிவதற்குள்ளாகவே மரணமடைந்தனர்.

மீண்டும் இரண்டு நாள்கள் கழிந்த பின்னர் - ஆகஸ்ட் 9ஆம் நாள் முற்பகல் 11-02 மணிக்கு, "குண்டு மனிதன்" (Fat man) என்று பெயரிடப்பட்ட மற்றோர் அணுகுண்டு "நாகசாகி" நகரின் மீது வீசப்பட்டது.

நகரின் மையப்பகுதியில் 500 மீட்டர் உயரத்தில் வெடித்த இந்தக் குண்டு 22,000 டன் TNT-க்கு இணையான வெடிதிறன் படைத்தது. 3.25 மீட்டர் நீளமும், 1.5 மீட்டர் அகலமும் கொண்டிருந்த இந்தக் குண்டின் எடை 4.5 டன் ஆகும். 2,80,000 மக்கள் வாழ்ந்த நாகசாகியில் குண்டு வெடித்ததும் 40,000 மக்கள் உடனடியாக இறந்து போயினர். மேலும் 34,000 பேர் காயமுற்றதாலும், கதிர்வீச்சினாலும் ஓராண்டு முடிவதற்குள் உயிரிழந்தனர்.

ஹிரோஷிமாவில் 13 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், நாகசாகியில் 6.7 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் முற்றிலும் எரிந்து சாம்பலாகின. அக்கினிச் சூறாவளியில் ஹிரோஷிமா தொடர்ந்து ஆறு மணி நேரம் எரிந்தது. தொடர்ந்து கடும்

*இதன் தொடர்ச்சி -9 ஆம் பக்கம் ...*

# முஸ்லிம்களும் ஊடகங்களும்

(மெப்கோ அமைப்பு நடத்திய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு வென்ற கட்டுரை) -தொடர்

*-மாலிக் கான்.M.Sc,*

பொதுவாக முஸ்லிம்கள் ஊடகங்களில் பின் தங்கியிருப்பது அனைவரும் ஏற்றாக வேண்டிய கூற்று. எனவே இதை விரிவாக அலசுவதை விடுத்து ஊடகங்களில் நாம் எவ்வாறு முன்னேறலாம் என்பதை ஆய்வு செய்வோம்.

## முஸ்லிம்கள் மீடியாக்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?

இன்றைய நவீன கண்டுபிடிப்புக்களைத் தூரநோக்கு பார்வை கொண்டு அதன் ஆரம்பத்திலேயே அங்கீகரிக்கவேண்டும். அதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஆதரவான மக்கள் சக்தியை உருவாக்க முஸ்லிம்கள் பாடுபடவேண்டும். மீடியாக்களில் முஸ்லிம்கள் தாக்கத்தை ஏற்படுத்த பலவழிகள் உள்ளன, அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே பட்டியலிட்டுப் பார்ப்போம்.

**கல்வியின் முன்னேற்றம் ஊடகங்களின் வளர்ச்சிக்கு அடிகோலிடும்...**

கல்வி கற்பதில் முஸ்லிம்கள் ஆரம்பம் முதலே ஆர்வம் காட்டாத நிலை நம் சமுதாயத்தில் தொடர்ந்துள்ளது. மனித அறிவின் பிறப்பிடம் கல்வி என்பதை ஏனோ முஸ்லிம்கள் மறந்துவிட்டார்கள். எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய சமுதாய மக்களாக முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு இருக்கையில் கற்றறிந்த மாற்றார்கள் முஸ்லிம் சமுதாயத்தை ஊடகங்களின் வாயிலாக நசுக்குகிறார்கள். ஊடகங்களை எதிர்கொள்ள முஸ்லிம் சமுதாயத்தை கல்வியில் முன்னேற்றமடையச் செய்யவேண்டும். வீடியோ கான்.்.பிரன்சிங் மூலம் ஆன்லைனில் கல்வி கற்கும் நிலை நிலவி வருகின்ற சூழலில் முஸ்லிம்களுக்கு என்று எத்தனை கல்வி நிலையங்கள் இருக்கின்றன? விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையில் கல்விக்கூடங்களை நாம் வைத்திருக்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும். பணம் படைத்த முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் அதற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திட முன்வர வேண்டும். கற்றறிந்தவர்கள் அனைவரும் இதற்காகப் பாடுபடவேண்டும்.

கல்வியை மார்க்கக் கல்வி, உலகக் கல்வி என்று பிரிக்காமல் இரண்டும் இணைந்த அறிவு இளம் தலைமுறைகளுக்குக் கிடைக்கப் பாடுபடவேண்டும். முஸ்லிம் சமுதாயம் கல்வியில் பின்தங்கியதால் மீடியாவில் மட்டுமலலாது அரசு வேலைவாய்ப்பு, அரசியல் போன்றவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. மீடியாவில் முஸ்லிம்கள் முன்னேறுவதற்கு கல்வியில் முன்னேற்றம் மிகஅவசியம்.

**இதழியல் மற்றும் மொழியியல் முன்னேற்றம்...**

இதழியல் (Journalism) என்பது வாரஇதழ்கள், மாதஇதழ்கள், தினசரி செய்திப் பத்திரிக்கைகள் மற்றும் எழுத்து வடிவில் மக்களைச் சென்றடையும் அனைத்து ஊடகங்களும் இதில் அடங்கும். எந்த ஒரு உலகச் செய்தியை நாம் அறிந்துகொள்ள வேண்டுமெனினும் மாற்றார்களிடத்தில் உள்ள ஊடகங்களைத்தானே அணுகவேண்டிய சூழல் நிலவிவருகிறது. உதாரணத்திற்கு தமிழில் முஸ்லிம்களால் நடத்தப்படும் தினசரிச் செய்தித்தாள் ஏதேனும் உண்டா? வேதனைக்குரிய விஷயம் முஸ்லிம்களில் திறமையான எழுத்தாளர்கள் மிகமிகக் குறைவு. பத்திரிக்கைத் துறையில் நமது சமுதாயம் முன்னேற்றம் காணவேண்டும். கருத்துக்கள் என்னவாக இருந்தாலும் அதைச் சீரிய முறையில் எடுத்துரைக்க மொழி என்ற ஊடகம் அவசியமாகிறது. எனவே மொழியை அதன் இலக்கிய, இலக்கண அறிவோடு அறிதல் வேண்டும். ஆங்கிலம் என்பது உலகில் அதிகமானோரால் பேசப்பட்டு வரும் மொழி, எனவே அவற்றையும் நாம் கற்றறிய வேண்டும்.

பட்டப் படிப்புகளில் “இதழியலும்” ஒரு பிரிவு. இதில் முஸ்லிம்கள் ஆர்வம் செலுத்திப் படித்து திறமையான எழுத்தாளர்களாக உருவாகவேண்டும். மீடியாவில் நம் சமுதாயம் முன்னேற திறமையான எழுத்தாளர்கள் பலர் உருவாக (உருவாக்க) வேண்டும். அதன் மூலமாக கணிசமான முறையில் முஸ்லிம் சமுதாயமும், இஸ்லாமும் ஊடகங்களில் வெற்றியைக் காணும்.

**தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் வானொலி அலைவரிசைகள்....**

எந்த ஒரு செய்தியும் எழுத்துவடிவில் மக்களைச் சென்றடைவதை விட காட்சி ஊடகமான (Visual Media) தொலைக்காட்சி சேனல்கள், திரைப்படங்கள், குறும்படங்கள் (Documentery Films) போன்றவற்றின் மூலமாக விரைவாகச் சென்றடைந்துவிடும். காட்சியோடு செய்திகள் மக்களைச் சென்றடையும் போது மக்கள் மனதில் அச்செய்திகள் பதியும். இவ்வகையான ஊடகங்களில் முஸ்லிம்கள் இப்போதுதான் தலைகாட்டியுள்ளார்கள். உலக அளவில் இஸ்லாத்தைச் சொல்வதற்கும், முஸ்லிம்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறவும் சில சேனல்கள் மட்டுமே உள்ளன, அதுவும் அரபி சேனல்களாக இருக்கின்றன. ஆங்கிலத்தில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு சேனல்கூட உண்டா எனில் இல்லை.

பி.பி.ஸி மற்றும் சி.என்.என் போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான ஊடகங்கள் உலக அரங்கில் அதிகமானோரால் முஸ்லிம்கள் உட்பட கவரப்படுவதற்குக் காரணம் அவை அறிவியல் செய்திகளை ஆய்வுசெய்து தருகின்றன, மருத்துவச் செய்திகள் மற்றும் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்வதேயாகும்.

இத்தனை காலம் கழிந்து டாண் தமிழ்ஒளி சேனலில் தமிழில் இஸ்லாமியப் பிரச்சாரமும், முஸ்லிம்களின் பிரச்சளைகளையும் தினமும் சில மணித்துளிகள் ஒளிபரப்பாகின்றது என்பது வியப்புக்குரிய செய்தி. அத்தகைய சேனல்களும் முஸ்லிம்களுக்குச் சொந்தமா? எனில் அதுவும் இல்லை. ஆடல், பாடல், இசை, பொழுதுபோக்கு என்று எடுத்துக்கொண்டால் எண்ணற்ற தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள்.

இத்தகைய ஊடகங்களை முஸ்லிம்கள் பயன்படுத்த முன்வரவேண்டும். இஸ்லாத்தை எத்திவைப்பதோடல்லாமல் முஸ்லிம் சமுதாயம் எதிர்கொண்டிருக்கும் பிரச்சனைகள்,

சமுதாய வளர்ச்சி, சேவை போன்ற நல்ல நோக்கங்களுக்கு இத்தகைய ஊடகங்களில் தாக்கம் ஏற்படுத்தவேண்டும். தொலைக்காட்சி, திரைப்படம், குறும்படம் (Documentery) என்று போனால் இசை, ஆடல், பாடல், கவர்ச்சி மற்றும் கமர்ஷியல் இல்லாமல் முடியுமா? என்று கேள்வியெழுப்பிக் கொண்டிருக்காமல் இஸ்லாத்தின் வட்டத்திற்குள் இருந்துகொண்டு இத்தகைய ஊடகங்களை எப்படிக் கையாளலாம் என்பதைச் சிந்தித்துப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

**தனிநபர் பிரச்சாரங்கள், மேடை நாடகங்கள், கருத்தரங்குகள், ஜும்மாப் பேருரைகள்...**

இவையாவும் மக்களைச் சென்றடையும் ஊடகங்களே! இவற்றின் மூலமாகவும் மக்கள் சக்தியை உருவாக்கிட முடியும். நபி (ஸல்) அவர்கள் மார்க்கத்தை மட்டும் போதித்துச் சென்றுவிடாமல் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அம்சங்களையும் கற்றுக் கொடுத்துச் சென்றுள்ளார்கள். காலத்திற்குத் தகுந்தாற்போல் அவர்கள் வெள்ளிமேடைகளில் (குத்பாப் பேருரைகள்) பிரச்சாரங்கள் செய்துள்ளார்கள். ஆனால் இன்று நம் நாடுகளில் பெருவாரியான முஸ்லிம்கள் ஒன்று குழுமக் கூடிய வெள்ளிக்கிழமை பேருரைகள் அரபி மொழியிலேயே சடங்குக்காக நடந்து வருகின்றன. நம்மில் பலரும் அதைப் பக்தியோடு கேட்டு துயில் கொண்டு வருகிறோம். இன்றைய முஸ்லிம் சமுதாயம் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது, சமுதாயத்தில் படர்ந்துவிட்ட களங்கங்கள் என்ன? மார்க்கத்தை எவ்வாறு நிலைநாட்டலாம் என உணர்ந்து இந்த குத்பாப் பேருரைகள் அமைந்தால் அதுவும் மீடியாவில் மகத்தான வெற்றிதான்.

**எந்த ஒரு செய்தியும் எழுத்துவடிவில் மக்களைச் சென்றடைவதை விட காட்சி ஊடகமான (Visual Media) தொலைக்காட்சி சேனல்கள், திரைப்படங்கள், குறும்படங்கள் (Documentery Films) போன்றவற்றின் மூலமாக விரைவாகச் சென்றடைந்துவிடும். காட்சியோடு செய்திகள் மக்களைச் சென்றடையும் போது மக்கள் மனதில் அச்செய்திகள் பதியும். இவ்வகையான ஊடகங்களில் முஸ்லிம்கள் இப்போதுதான் தலைகாட்டியுள்ளார்கள்.**

பொழுதுபோக்கிற்காக எத்தனையோ அம்சங்கள் வந்துவிட்டன. ஆனால் அதிலும் உபயோகமுள்ள ஒரு கருத்தை வலியுறுத்தி பிரச்சாரங்கள், மேடை நாடகங்கள், கருத்தரங்குகள் நடத்துதல் அவசியம். இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலமாகவும் மீடியாவின் கவனத்தை திசைதிருப்ப முடியும். மார்க்கப் பிரச்சாரங்கள், தொழுகை, இபாதத் போன்றவற்றிற்கு மட்டும் முஸ்லிம்கள் ஒன்று திரளக்கூடியவர்களாக இருந்த நிலை மாறி பாபர் மசூதி பிரச்சனை, வாழ்வுரிமை மாநாடுகள், அரசியல் மேடைகள், மதமாற்ற தடைச் சட்டம், லாட்டரி ஒழிப்பு போன்ற பிரச்சனைகளுக்கும் தற்போது ஒன்று குழுமக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனினும் மீடியாவில் நாம் சொல்லக்கூடிய அளவில் முன்னேற்றம் கண்டுவிடவில்லை. எனவே நவீன மீடியாக்களைப் பயன்படுத்தி காலத்திற்கேற்றாற் போல செய்திகளை மக்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

**இணையம் (Internet)...**

இணையம் என்பது உலகத்தின் ஒட்டுமொத்த ஊடகங்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து இணைத்துவிடுகிறது. டாட்காம், வெப்காம், பிளாக், இ-மெயில், சாட்டிங், டேட்டிங், ஃபாரம், ஆன்லைன் என்று உலக மீடியாக்களில் இணையம் இமாலய முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றது. நம் சமுதாய மக்களோ இன்னும் கம்ப்யூட்டர் என்றால் என்ன? சாஃப்ட்வேர் என்றால் என்ன? ஹார்ட் வேர் என்றால் என்ன? என்று கணினி பற்றிய உபயோகம் குறித்து அறியாமலே இருக்கிறார்கள். கணிப்பொறி மற்றும் இணையத்தின் பயன்பாடுகளைக் கொண்டு முஸ்லிம்கள் ஊடகங்களை வலுவடையச் செய்யலாம். கணினி மற்றும் இணையத்தின் எல்லாப் பயன்பாடுகளும் தமிழிலேயே அறிந்துகொள்ள மென்பொருட்கள் (Software) வந்துவிட்டன. கம்ப்யூட்டர் மற்றும் இண்டர்நெட் என்ற ஊடகங்களின் பயன்பாடுகள் அறிந்து முஸ்லிம்கள் இவ்வாறான மீடியாக்களைப் பயன்படுத்த முன்வருதல் வேண்டும்.

**ஒற்றுமை என்ற பண்பு மீடியாவின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்...**

முஸ்லிம்கள் மீடியாவில் தாக்குப்பிடித்து மேற்கண்ட வழிகளில் முன்னேற ஒற்றுமை என்ற பண்பை முன்நிறுத்தியாக வேண்டும். உலக அளவில் இருக்கும் 50க்கும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் ஒருமித்த கருத்தில் இருந்தால் எதிர் சக்திகளை எதிர்கொள்ள முடியாதா? ஊரளவில் முஸ்லிம்கள் ஜமாஅத்களாகவும், அமைப்புகளாகவும் பிரியாமல் ஒன்றுபட்டால் பெரிய மக்கள் சக்தியை உருவாக்க முடியாதா? கண்டிப்பாக முடியும். அப்போதுதான் மீடியாவின் மூலமாக சிறந்த செயல் திட்டங்கள் உருவாக்கமுடியும். பொருளாதாரத்தைச் சரிகட்டி நடைமுறைப்படுத்தவும் முடியும். இதை முஸ்லிம் சமுதாய மக்கள் உணர்ந்து செயல்படவேண்டும்.

***எந்த ஒரு சமுதாயமும் தன் உள்ளத்திலுள்ள (போக்குகளை) மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை மாற்றிவிடுவதில்லை - நிச்சயமாக அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவியுறுபவனாகவும், (யாவற்றையும்) நன்கறிபவனாகவும் இருக்கின்றான். (அல்-குர்ஆன் 8:53)***

எல்லாம் வல்ல அல்லாஹ் தூய இஸ்லாத்தையும், அதைப் பின்பற்றும் முஸ்லிம்களையும் மீடியாவில் மட்டுமல்லாது எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடையச் செய்வானாக. ஆமீன். (முற்றும்)

## இஸ்லாமிய மாலை அமர்வு

நாள் : இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஹிஜ்ரி 26-08-1426 (30-09-2005) வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 4:10 முதல் 8.00 மணி வரை
இடம் : ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகம் (புதிய கட்டிடம்) மாடியில்,
- பெண்களுக்கு தனி இடவசதி செய்யப்பட்டுள்ளது.
- இரவு உணவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
-பல மார்க்க அறிஞர்கள் உரையாற்ற இருக்கிறார்கள்.
அனைவரும் கலந்துகொண்டு பயனடைய வேண்டுகின்றோம்.

# மயக்கம் Vs இரத்த அழுத்தம் - Part - 2

வழங்குபவர்: டாக்டர் A. ஷேக் அலாவுதீன் MD, (Alt. Med) ATCM (CHINA)

**இரத்த அழுத்தம் (Blood Pressure)**

(இந்தப் பகுதியை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு கடந்த ஹிஜ்ரி ரஜப் 1426-ல் வெளிவந்த முதல் மருத்துவக் கட்டுரைத் தொடரை வாசித்து விட்டு இந்த மாதத் தொடரை வாசிக்கவும்).

**மயக்கம் Vs இரத்த அழுத்தம்**

நம் உடல் உறுப்புக்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால், அதற்குத் தேவையான ஊட்டச்சக்தியை இரத்த ஓட்டம் மூலம் பெற்றாக வேண்டும். அப்படி பெற முடியாத போது உடல் களைப்படைந்து விடுகின்றது. களைப்பானது முறையான சிகிச்சை மூலம் சரி செய்யப்படாத போது அது நோயாக மாறுகின்றது. இந்த நேரத்தில் உடல் நம்மை காப்பாற்றிக் கொள்ளவதற்காக இயற்கையாகவே முயற்சி செய்கின்றது. இதன் விளைவாக நமக்கு மயக்கம் ஏற்பட்டு, கட்டாய ஓய்வு எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

நமக்கு ஓய்வு அவசியம் என்பதற்கு உடல் கொடுக்கும் முதல் சிக்னலே மயக்கம் தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் அதனையும் மீறி ஓய்வெடுக்காமலிருக்கும் போது, தொடராக மயக்கம் ஏற்பட்டு நிர்ப்பந்தமாக படுக்கை நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றோம்.

மீண்டும் சக்தியானது இரத்த ஓட்டம் மூலம் பெறப்பட்டவுடன் நாம் மயக்கத்திலிருந்து தெளிவடைகின்றோம். பூரணமாக உடல் உறுப்புகள் சக்திச் சமநிலையை அடையாதவரை இந்த மயக்கம் அடிக்கடி ஏற்படவே செய்யும்.

அக்குபஞ்சர் நாடி பரிசோதனை முறையில் உடலில் எந்த உறுப்பு பலவீனமடைந்திருக்கின்றது என்பதை எளிதில் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கும் போது இந்த மயக்கம் நிரந்தரமாகக் குணமடைகின்றது.

சிலருக்கு கல்லீரல், மருந்துகள் மாத்திரைகளால் அல்லது சக்திநிலை மாறுபாட்டால் பாதிக்கப்படும் போது தலை சுற்றுவது போன்ற நிலைமை உருவாகும். கல்லீரலைச் சரி செய்வதன் மூலம் இந்த பிரச்னையை சரி செய்து விட முடியும். கல்லீரலும் பித்தப்பையும் இணை உறுப்புகள். இவை ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுபவை. கல்லீரலின் பாதிப்பு நிச்சயமாக பித்தப்பையையும் பாதிக்கும். இது போன்ற நிலைகளில், தலைசுற்றல், வாந்தி, அளவுக்கதிகமான களைப்பு, தூங்க வேண்டும் என்ற மிகுந்த ஆவல், தூக்க நிலையிலேயே இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். இவைகளை நாடி பரிசோதனை மூலம் நிரந்தரமாகக் குணமாக்கி விடலாம் இன்ஷா அல்லாஹ்.

உடல் உறுப்புக்களில் முக்கியமான 12 உறுப்புக்களின் நிலையை உடல் மிகவும் கவனமுடன் பாதுகாத்துக் கொள்கின்றது. இதில் ஏதாவது ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளோ பாதிக்கப்படும் போது, இந்த 12 உறுப்புக்களைத் தவிர மற்ற இடங்களுக்குச் செல்லும் இரத்தமும் பாதிக்கப்பட்ட உறுப்புக்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றது.

12 முக்கிய உறுப்புக்களாவன 1)இதயம், 2)சிறுகுடல், 3)மண்ணீரல், 4)வயிறு, 5)நுரையீரல், 6)பெருங்குடல், 7)சிறுநீரகம், 8)சிறுநீர்ப்பை, 9)கல்லீரல், 10)பித்தப்பை, 11)இதய மேல் உறை மற்றும் 12)தேக(உடல்) வெப்பம்

இந்த 12 உறுப்புக்களில் எந்த ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டாலும் நோய் உருவாகி விடும். அப்படி உருவாகக் கூடாது என்பதற்காகத் தான் உடல் இவ்வுறுப்புக்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து இந்த 12 உறுப்புக்கள் இல்லாமல் மற்ற உறுப்புக்களுக்குச் செல்லும் இரத்தத்தை பாதிக்கப்பட்ட உறுப்புக்களுக்குத் திருப்பியனுப்புகின்றது. அவ்வாறு இரத்தம் செல்லாமல் திருப்பப்படும் உறுப்புகளில் மிகவும் பிரதானமானது மூளை, ஆண்-பெண் பிறப்பு உறுப்புக்கள்.

மூளைக்குச் செல்லும் இரத்தம் திருப்பி அனுப்பப்படும் போதும்.., மூளைக்குப் போதிய இரத்தம் கிடைக்காத போதும்.., மூளை செயலில் களைப்படைந்து விடுகின்றது. இந்த பிரச்னை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டு களையப்பட வேண்டும். இல்லையேல் இந்த பாதிப்பு தொடர்ந்து இறுதியில் பக்கவாதத்தில் முடிந்து விடும்.

எந்த உறுப்பு பாதிக்கப்பட்டதனால் மூளைக்குச் செல்லும் இரத்தம் திருப்பியனுப்பப்படுகின்றது என்பதை எளிதாக கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் இந்த பிரச்னையை முளையிலேயே களைந்து விடலாம்.

இவைகளை விட்டு விட்டு இரத்த அழுத்தம் அதிகமாகயிருக்கின்றது அதனால் தான் மயக்கம் வருகின்றது, தலை கிறுகிறுப்பு வருகின்றது. பக்கவாதம் ஏற்பட்டு விடும் என்று பல தவறான காரணங்களைச் சொல்லி நோயாளிகளை இரத்த அழுத்த மாத்திரைகளைச் சாப்பிட வைப்பது மனித குலத்திற்குச் செய்யும் துரோகமாகும்.

மீண்டும் மீண்டும் சொல்வது என்னவென்றால், இரத்த அழுத்தம் வியாதியல்ல. எந்த உறுப்பின் பாதிப்பைச் சரி செய்ய இரத்த அழுத்தம் உருவாகின்றதோ அந்த உறுப்பின் பாதிப்பைச் சரி செய்து அதன் மூலம் இரத்த அழுத்தத்தை சீரான நிலையில் வைத்திருக்க உதவும் மருத்துவமே மகத்தான மருத்துவம்.

அந்த வகையில் அக்குபஞ்சர் மருத்துவம், 5000 வருடங்களுக்கு மேலான மனித குலத்திற்கு ஆர்ப்பாட்டம் இல்லாமல் சேவை செய்து வருகின்றது... **தொடரும்...!**

**அடுத்த தொடரில்..! ஆண்மைக் குறைவு Vs இரத்த அழுத்தம், பெண்மைக் கோளாறு Vs இரத்த அழுத்தம் இன்ஷா அல்லாஹ்!**

## வாசகர்கள்! – கருத்து!

**அன்பிற்குரிய "சுவனப்பாதை" வாசகர்களே!!! சுவனப்பாதையில் பிரசுரமாகும் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் குறித்த உங்கள் மேலான கருத்துக்களை "சுவனப்பாதை" பத்திரிக்கைக் குழு வரவேற்கிறது. உங்களின் கருத்துக்கள், எண்ணங்கள், உங்களின் எழுத்துப் படைப்புகள் என எதுவாகினும் கீழ்கண்ட முகவரிக்கு மடல் மூலம் அனுப்பலாம்.**

Mr.Ibrahim(Madani), Tamil Division,
**P.O.Box-32628,** Jeddah-21438, K.S.A
email : suvanam@gmail.com

*5-ஆம் பக்கத் தொடர்ச்சி...(மீண்டும்...)*

மழை தொடங்கியது. சாதாரண மழையல்ல பெரும் கதிர்வீச்சு நிறைந்த, எண்ணெய் பசையோடுகூடிய திரவ மழை ஊழித் தாண்டவம் ஆடியது. இதனை வரலாறு கருப்பு மழை (Black rain) என்று பதிவு செய்துள்ளது. இன்று வரையில் அந்தப் பகுதிகளில் புல்கூட முளைப்பதில்லை. பாயும் புனலும் பாழாய்ப் போனது. வீசும் காற்றும் விஷமாய்ப் போன பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகவே பிறந்து வருகிறார்கள்.

புதியதாகக் கண்டுபிடித்த அழிவாயுதமாம் அணுவாயுதத்தைப் பரிசோதித்துப் பார்க்கவும், உலக நாடுகளை அச்சுறுத்தித் தனது மேலாண்மையை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா முற்பட்டது என்பதில் பெருமளவு உண்மை (நன்றி: தினமணி)

“ஜனாதிபதி அவர்களே...! நேற்று இரவு நன்றாகத் தூங்கினீர்களா?” - இது செய்தியாளர்களின் கேள்வி.

“ஆமாம்...! எப்போதையும்விட நேற்று அமைதியாகத் தூங்கினேன். எங்கள் பரிசோதனை வெற்றி பெற்று விட்டது. இந்த உலகத்தில் நாங்கள்தான் இப்போது பலம் வாய்ந்தவர்கள்.” - இப்படி பதில் சொன்னவர் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரூமன்.

ஹிரோஷிமாவில் அணு ஆயுதத்தால் நேர்ந்த மரணக்குவியல்களை நினைத்து உலகம் வருத்தம் தெரிவிக்கும் இந்த நேரத்தில் இன்னொரு ஹிரோஷிமா ஏற்படாமல் தடுக்க என்ன செய்கிறது?

ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட அணு ஆயுத நாடுகளும் மற்றும் அணு ஆயுத தொழில் நுட்பம் கொண்ட நாடுகளும் எந்த அளவு அனுசரிக்கின்றன என்பது மிகப்பெரும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

அணு ஆயுதம் என்பது ஏதோ ஒருசில தனிச் சிறப்புகளை உருவாக்கித்தரும் ஒரு ஆயுதமாக நினைத்து அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சீன மற்றும் ரஷ்யா நாடுகள் அதை பெருமையாக நினைத்து சேமித்து வைத்தன. இப்பொழுது அந்த தொழில் நுட்பத்தை தங்களது பொருளாதார முன்னேற்றங்களுக்காக பயன்படுத்த துவங்கியிருப்பது அணு ஆயூதத்தை வேகமாக பரவச் செய்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

“அணு ஆயுதம் என்னிடம் மட்டுமே இருக்க வேண்டும், நான் மிகவும் பொறுப்பானவன், நான் அதை அநியாயத்திற்கு பயன்படுத்த மாட்டேன். நான் அதை பத்திரமாக வைத்திருக்கிறேன்” என்றெல்லாம் உலகத்திற்கு விரிவுரை வழங்கிக் கொண்டிருக்கும் இந்த நாடுகள், அணு ஆயுதத்தை அடையத்துடிக்கும் நாடுகளைப் பார்த்து, “உனக்கு இதை வைத்துக் கொள்ளத் தெரியாது, நீ பொறுப்பற்றவன், உன்னிடம் இதைப் பாதுகாக்கும் அறிவு இல்லை.. நீ அயோக்கியன் என்று பேசுவதே” இந்த அணு ஆயுதப் பரவலுக்கு அடிப்படைக் காரணம் என்று நான் நினைக்கிறேன்.

அணு ஆயுதம் என்ன உன் அப்பன் வீட்டு சொத்தா? எனக்கும் அதை உருவாக்கத் தெரியும்.. நீ யார் எனக்கு புத்திமதி சொல்ல என்று ஒரு சில நாடுகள் அணு ஆயுதத்தை எப்படி அடைவது என்ற முயற்சியில் இறங்கியுள்ளன.

அணு ஆயுதம் இருந்தால் அதைக் காட்டி பயமுறுத்தி பணம் சம்பாதிக்கலாம் என்று ஒருசில நாடுகள் கிறுக்குத்தனமான சிந்தனைகளைக் கொண்டும் செயல்படுகின்றன, உதாரணத்திற்கு வட கொரியாவைச் சொல்லலாம். உடைந்து போன சோவியத் யூனியனில் இருந்த நாடுகளிடம் அவரவர்கள் பங்கிற்கு கிடைத்த அணு ஆயுதங்களை எல்லாம் விலை கொடுத்து வாங்கிய அமெரிக்கா அவைகளில் சிலவற்றை அழித்து மீதியை தனது கிடங்கில் சேமித்து வைத்துள்ளது. இந்தக் கொள்கையை எப்படியாவது தனக்கு சாதகமாக்கி சில அரசியல் நலன்களை அடையத் திட்டமிடுகிறது வட கொரியா.

இன்னும் சில நாடுகள், தன்னிடம் அணு ஆயுதம் இருந்தால் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் தன்னை தாக்காது என்று அணு ஆயுதத்தை எப்படிப் பட்டாவது அடைந்துவிட வேண்டும் என்று போராடுகின்றன, உதாரணம் ஈரான். மத்தியக் கிழக்கு நாடுகளில் நாலா பக்கத்திலும் அமெரிக்கா ராணுவத் தளங்களை அமைத்து ஈரானிற்கு கிடுக்கிப்பிடி போடப்பட்டுள்ளதை உடைக்க ஒரே வழி அணு ஆயூதம்தான் என்று ஈரான் அதை அடைந்துவிடத் துடிக்கிறது.

என்ன காரணமாக இருந்தாலும் அணு ஆயுதம் இப்போது பரவலாகிக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. 1950களில் பிரிட்டன் யாருக்கும் தெரியாமல் அணு ஆயுதம் தயார் செய்வதற்கான 20 டன் கன நீரை இஸ்ரேலுக்கு விற்றது தற்போதுதான் தெரிய வந்துள்ளது. எந்த நாடு யாருக்கு இந்த அணு ஆயுதம் தொடர்பான தகவல்களையும், சாதனங்களையும், தொழில் நுட்பத்தையும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது என்பது அமெரிக்காவிற்கு தெரிய வந்தாலும் தனது அராஜக நிலையின் காரணமாக அமெரிக்காவின் பிரசங்கத்தை யாரும் கேட்பதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அணு ஆயுதம் என்பது தற்போது ஒரு பாதுகாப்பாகத் தெரியவில்லை. உலகில் இருக்கும் துக்கடா நாடுகள் முதல் பெரிய நாடுகள் வரை எல்லோரிடத்திலும் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் பொழுது விடிந்து பொழுது போனால் எவன் எங்கு என்ன பிரச்சினை செய்வானோ என்று பயம். போகிற போக்கில் அமெரிக்கா உலகமெங்கும் “எமர்ஜென்சி” பிரகடனம் செய்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. கேட்டால் இது “பிரிஎம்டிவ் ஆக்ஷன்” (pre-emptive action) என்ற தத்துவத்தை சொன்னாலும் கேட்பதற்கு இப்போது எந்த நாட்டிற்கும் திராணியில்லை. கூடவே இங்கிலாந்தும் சேர்ந்து ஜால்ரா அடிக்கும். அணு ஆயுதம் அமெரிக்காவிற்கு பாதுகாப்பு என்பதைவிட பிரச்சினையாகத்தான் தெரிகிறது.

ஈரானைப் பொறுத்தவரை அணு ஆயுதம் அந்த நாட்டிற்கு பாதுகாப்பாகத் தெரிகிறது. யார் கண்டது, அதுவே அந்த நாட்டிற்கு இன்னுமொரு போரை உருவாக்கி வைத்தாலும் வைக்கலாம். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்தியாவின் மதிப்பை உயர்த்துவதாக அமைந்துள்ளது. பாகிஸ்தானைப் பொறுத்தவரை அது ஒரு “வேஸ்ட்” என்றுதான் தெரிகிறது. வல்லரசு நாடுகள் எதுவும் அதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

எது எப்படியாயினும் இந்த அணு ஆயுதம் உலகிற்கு பிரச்சினையே. இதை ஒழித்துக் கட்டி நம்மை நிம்மதியாக வாழவிடுவார்களா இந்த அரசியல் மேதாவிகள்? ஹிரோஷிமாவில் நடந்தது வேறு எங்கும் நடக்காமல் இருக்க பிரார்த்தனை செய்வதைத் தவிர்த்து நம்மால் வேறு என்ன செய்யமுடியும்?

**- அக்பர் பாட்சா**

# இராஜ நாகம் (King Cobra) & கீரிப்பிள்ளை(Mangoose)

-அறிவியல் தொடர்-

*E. உஸ்மான் அலி*

இந்த உலகத்தில் இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் தங்கள் எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பல ஏற்பாடுகளை வைத்துத்தான் இறைவன் படைத்துள்ளான். ஒன்றின் பாதுகாப்பு அரணை மற்றது (இறைவனின் ஏற்பாட்டின் படி) மிகைத்து விடும் போது அதற்கு முடிவு ஏற்பட்டு விடுகின்றது. விலங்குகள், பறவைகள், ஊர்வன தாவரங்கள் மற்றும் கண்ணுக்கு தெரியாத நுன்னுயிர்கள் உட்பட அனைத்தும் ஏதாவது ஒரு வழியில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பிரத்யேகமாக அமையப்பெற்ற ஒன்றை பயன்படுத்தி தங்களை அழிவிலிருந்துக் காத்துக் கொள்ளுகின்றன.



விலங்குகளைப் பொறுத்தவரை பலவிதமான பாதுகாப்பு அரணை பெற்று விளங்குகின்றன. சிலவற்றிற்கு கொம்பு அமைப்பும், சிலவற்றிற்கு கூர்மையான நகங்களும், சிலவற்றிற்கு உடலைக் கிழித்து மாமிசத்தை உண்ணக்கூடிய ஆற்றல் மிக்க தாடையுடன் கூடிய பற்களும், சிலவற்றிற்கு உடலின் மேற்பரப்பில் வளரும் ஊசியைப் போன்ற முடிக்கற்றைகளும், சிலவற்றிற்கு வேகமாக ஓடக்கூடிய ஆற்றல் மிக்க கால்களும் பாதுகாப்பு சாதனமாய் விளங்குகின்றன.

தாவரங்களைப் பொறுத்தவரை முக்கியமாக முட்கள் அமைப்பையும் சில விஷத்தன்மையையும் பெற்று விளங்குகின்றன. ஆ.்ப்பிரிக்காவின் வனப்பகுதியில் ஒரு வகை செடியின் பிரத்யேகமான தன்மை என்னவென்றால் ஆடு, மாடு போன்ற கால்நடைகள் அச்செடியின் இலையைக் கடித்து உண்ண ஆரமபித்தவுடன் அதன் இலைகளில் விஷத்தன்மை பரவ ஆரம்பிக்கின்றது. அது மட்டுமல்லாமல் அந்த பகுதியில் உள்ள மற்ற செடிகளும் தங்கள் இலைகளில் விஷத்தை பாய்ச்சுகின்றன. ஒரு செடிக்கு பாதிப்பு ஏற்பட்ட உடன் அது தன்னை பாதுகாத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் மற்ற செடிகளுக்கும் செய்தியை அனுப்பும் அதிசயத்தை கண்டு பிடித்துள்ளார்கள். இதிலிருந்து தாவரங்கள் ஒன்றுடன் ஒன்று தொலைத் தொடப்பு கொள்வது அறிய வந்துள்ளது.

மலேசியாவின் இரப்பர் தோட்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இங்கு குறிப்பிடத்தக்கது. இரப்பர் தோட்டத்தில் வேலை செய்யக் கூடிய சிறுவன் ஒரு குரங்கின் குட்டியை அடித்துக் கொன்று விடுகின்றான். அச்சமயம் அந்த சிறுவன் அணிந்திருந்தது மஞ்சள் நிற சட்டையாகும். இதன் பின் விளைவாக நடந்த நிகழ்ச்சி, இறந்த குட்டியின் தாய்க் குரங்கு சத்தம் போட்டு கத்தியவுடன் நாலாப் புறங்களிலிருந்தும் நிறையக் குரங்குகள் அந்த இடத்தை முற்றுகையிட்டு மற்ற நிறங்களில் ஆடை அணிந்தவர்களை விட்டு விட்டு குறிப்பாக மஞ்சள் சட்டைப் போட்டவர்களை மாத்திரமே கடிக்க ஆரம்பித்தன. இதிலிருந்து ஆபத்தை விளக்கி செய்தியைப் வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் மஞ்சள் நிற சட்டைகாரன் தான் நம் எதிரி என்பனப் போன்றத் தகவல்களை துல்லியமாக தெரிவிக்கக் கூடிய இது போன்ற சம்பவங்கள் இத்தகைய விலங்கினங்களின் சமூக ஒற்றுமையுடன் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகளாகும். இந்த நிகழ்ச்சி விலங்குகள் ஒன்றுடன் ஒன்று செய்திகளை தங்களுக்குள் பரிமாறிக் கொள்வது நிரூபனமாயிருக்கின்றது. பின்வரும் திருமறை வசனம் இதைத்தானே நமக்கு எடுத்தியம்புகின்றது.

**பூமியில் வாழும் உயிரினங்கள் தமது சிறகுகளால் பறந்து செல்லும் பறவைகள் யாவும் உங்களைப் போன்ற சமுதாயங்களே. அந்த ஏட்டில் எந்த ஒன்றையும் நாம் விட்டு விடவில்லை. பின்னர் அவர்கள் தம் இறைவனிடம் ஒன்று திரட்டப்படுவார்கள்.(06:38)**

1950-ம் ஆண்டு வாக்கில் பூச்சி மருந்துக்கு கட்டுப்படாத பூச்சி வகைகள் 8 மாத்திரமே இருந்ததாகவும் தற்காலத்தில் 50-க்கும் மேற்ப்பட்ட பூச்சி இனங்கள் பூச்சிகொல்லி மருந்தின் வீரியத்தை தாங்கக் கூடிய எதிர்ப்பாற்றலைப் பெற்று விளங்குவதாகவும் இந்தியாவின் விவசாயத் துறையின் ஒரு புள்ளி விபரம் கூறுகின்றது. இதிலிருந்து பூச்சி இனங்களும் தங்கள் உடலில் எதிப்பாற்றலைப் பெறுவதன் மூலம் ஏதோ வகையில் தங்களைக் காத்துக் கொள்ளக் கூடிய அம்சங்களைக் காலப்போக்கில் பெற்றுவிடுகின்றன.

மனிதர்கள் மற்றும் விலங்குகளைப் போன்றே தோல் அமைப்பை கொண்டு இறைவன் இவைகளைப் படைத்திருப்பானேயானால் இன்று நம்மால் ஒரு பறவையினத்தினைக் கூட காண இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். பறவைகளுக்கு இந்த அமைப்பை வைத்து படைக்கப்பட்டுள்ளதே இறைவனின் தீர்க்க தரிசனத்திற்கு சான்று பகர்கின்றது. இதில் நிச்சயமாக சிந்திக்கக் கூடிய மக்களுக்கு அத்தாட்சிகளை ஆக்கியிருக்கின்றான் இறைவன்.

சில சிறிய வகை உயிரினங்கள் தங்கள் வாழும் சூழ்நிலையை ஒத்த, நிறங்களை பெற்று விளங்குவதனால் தங்கள் எதிரியின் கண்களிலிருந்து தப்பிப் பிழைக்கின்றன. சிலவகை மீன்கள் தங்கள் உடலில் பெற்றுள்ள உயர் அழுத்த மின்சார தன்மையினால் பட்ட மாத்திரத்தில் தங்கள் எதிரியின் உயிரைக் குடிக்கும் அபரிதமான மின் ஆற்றலை தங்கள் பாதுகாப்பு அரணாக பெற்று விளங்குகின்றன. பாம்பு, தேள், வண்டு மற்றும் சிலந்திகள் போன்றவற்றிற்கு தங்கள் எதிரிகளுக்கு சிறிய பெரிய அளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய விஷத்தன்மையே அதன் பாதுகாப்பு அரணாய் விளங்குகின்றது. நம் கட்டுரையில் பார்க்க இருக்கும் கீரிபிள்ளை மிகக் கொடிய விஷத்தன்மை வாய்ந்த ராஜநாகத்தின் விஷத்தை தாங்கக் கூடிய அபரிதமான எதிர்பாற்றலை பெற்று விளங்குவதே அதனுடைய தலையாய பாதுகாப்பு அரணாகவும் மற்றவற்றிலிருந்து வேறுபட்ட விதிவிலக்கான அம்சமும் ஆகும். இப்போது நாம் நம்முடைய தலைப்பின் எல்லைக்குள் நுழைவோம்.

இந்த உலகத்தில் மனிதர்களுக்கு துன்பம் விளைவிக்கக் கூடிய எத்தனையோ இடர்பாடுகள் நம்முடன் நீக்கமற நிறைந்து நம்மை பின்னிப் பிணைந்து சூழ்ந்துள்ளதை எவராலும் மறுக்க இயலாது. இவைகளில் சற்று கவனக்குறைவு ஏற்பட்டுவிட்டால் ஏற்படும் இழப்புக்களும் துன்பங்களும் நம்மை மீளா துயருக்கு இட்டுச்

சென்றுவிடுகின்றது. மனிதர்களின் உயிருக்கு சவால் விடும் இரசாயணப் பாதிப்பு, சுற்றுப்புற சூழலை மாசுப் படுத்தும் நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்கள், உணவுப் பொருட்களின் நச்சுத்தன்மை, ஊரையே அழித்து சவக்குழிக்கு அனுப்பும் கதிரியக்க அபாயங்கள், அணு உலை விபத்துக்கள், மற்றும் இயற்கை சீரழிவுகள் போன்ற எண்ணற்ற அபாயங்கள் நம்மை நாலாப்புறங்களிலும் அரவணைத்து நிற்கின்றன.

வெள்ளப் பெருக்கிலிருந்து தன்னை காத்துக் கொள்ள அணைகள் கட்டப்பட்டது. உதாரணமாக சீனாவின் துயரம் என்று சொல்லப்படும் மஞ்சள் ஆற்றின் வெள்ளப் பெருக்கை முற்றிலுமாக கட்டுப்படுத்திய சம்பவமாகும். 1979-ம் ஆண்டு அமெரிக்காவின் பென்சில்வேணியாவில் உள்ள மூன்று மைல் தீவில் (three mile island) நிகழ்ந்த அணு உலை விபத்தாகிலும் சரி 1986-ம் ஆண்டு (முந்தைய) ரஷ்யாவின் உக்ரைனில் உள்ள செர்னோபிலில் ஏற்பட்ட நியூக்ளியர் கதிரியக்க கசிவினாலும் சரி 1984-ம் ஆண்டு இந்தியாவின் போபால் நகரில் நிகழ்ந்த ஐசோ சயனைடு வாயுவின் கசிவினால் ஏற்பட்ட கோர விபத்தாகிலும் சரி, மனிதர்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திச் சென்றதை நம்மால் எளிதாக மறக்கக் கூடிய சம்பவங்களா அவை. அதன் மூலம் படிப்பினை பெற்று மனிதன் இறைவன் அவனுக்கு கொடுத்த பகுத்தறிவைக் கொண்டு நிலையை செம்மைப் படுத்திக் கொள்கின்றானே இந்த பகுத்தறிவுதான் இவனுடைய தலையாய பாதுகாப்பு அரணாகும்.

இது போன்றது மற்றுமல்லாது தனக்கு ஏற்படக்கூடிய எந்த பிரச்சினையாகிலும் சரி இந்த பகுத்தறிவின் துணைக் கொண்டு எதிர் நீச்சல் போட்டு இலக்கை எட்டுகின்றான். இத்தகைய உயர்தினை படைப்பாகிய மனிதனின் உயிருக்கு சவால் விட்டு, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் உயிர்ப் பலியை வாங்கக்கூடிய உலகிலேயே மிக அதிக விஷமுள்ள ராஜநாகம் பற்றி நாம் தெரிந்துக் கொள்வதன் மூலம் இதற்கு சிம்ம சொப்பனமாய் விளங்கக் கூடிய நம் கட்டுரையின் நாயகர் திருவாளர் கீரிப்பிள்ளை அவர்களின் எதிப்பாற்றலைப் பற்றி அறிந்துக்கொள்வதில் கூடுதல் பொருத்தமாயிருக்கும் என்பதனால் ராஜநாகம் என்று அழைக்கப்படும் (king cobra) நல்லப் பாம்பைப் பற்றிப் முதலில் பார்ப்போம்.

பாம்பு என்றுச் சொன்னால் படையே நடுங்கும் என்று சொல்லப்படும் பழமொழி சற்றும் மிகைப்படுத்தி சொல்லப் பட்டதல்ல. அந்த அளவிற்க்கு பாம்பைப் பற்றிய அச்சம் நம்மிடையே விசாலமாகவே காலங்காலமாக இருந்து வருகிறது. உலகில் அதிக மக்கள் பாம்பு கடித்து இறக்கக் கூடிய எண்ணிக்கை இந்தியாவில் அதிகம். சிலர் இந்த விஷ ஜந்துவை வணங்குவதால் இவற்றை கொல்ல தயங்கி, விட்டு விடுகின்றனர். இருப்பினும் இதற்கு சந்தர்ப்பம் வாய்ப்பின் மனிதர்களை கொட்டி உயிரை குடித்து விடுகின்றன.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை நபிகள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்கள், தொழுமிடத்தில் கூட நீங்கள் இதுபோன்ற விஷ ஜந்துக்களைக் கண்டால் முதலில் அவற்றை கொன்று விட்டு பிறகு தொழுங்கள் என்று தெள்ளத் தெளிவாக சொல்லி நமக்கு வழிக் காட்டிச் சென்றுள்ளார்கள்.

ராஜ நாகம் (king cobra) என்று அழைக்கப்படும் இந்த “பொல்லாத” பாம்பை இந்த கட்டுரையிலே நம் சொல் வழக்குப்படி நல்லப் பாம்பு என்றே குறிப்பிடுவோம். பொதுவாக எல்லா விஷப் பிராணி மற்றும் ஜந்துக்களுக்கும் விஷத்தை உற்பத்தி செய்யும் பிரத்யேகச் சுரப்பி அமைந்துள்ளதைப் போன்றே நல்லப் பாம்பிற்க்கும் அதன் தலைப்பகுதியில் விஷச்சுரப்பி அமைந்துள்ளது. இதன் வாயின் மேற்பரப்பில் இதன் விஷ-பை (venom sac) அமைந்துள்ளது. இந்த விஷ-பையுடன் இணைந்த குழாய் (venom duct) உட்புறம் முற்றிலும் துளையுடைய முன்புற பற்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த முன்புறப் பற்களின் முனை மிகக் கூர்மையாகவும் துளையுடையதாகவும் அமைந்துள்ளது.

இவை தங்களின் எதிரிக்கு காயத்தை ஏற்படுத்துவதற்காகவே தீண்டுகிறது. அதன் பிறகு வாயின் உட்புறம் அமைந்த கடைவாய் பற்களைக் கொண்டு அதன் மேற்ப்புறத்தில் அமைந்த விஷ-பையை அழுத்துவதன் மூலம் வெளியேறும் விஷம் அதனுடன் இணைக்கப்பட்ட குழாய் மூலம் வெளியேறி துளையுடைய முன்பற்களை அடைகின்றது. அப்பொழுது தீண்டியதால் ஏற்பட்ட காயத்தின் மூலம் விஷம் இரத்த ஓட்டத்தில் கலந்தவுடன் முதலில் மத்திய நரம்பு மண்டலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது தீண்டியவுடன் பொதுவாக மரண பயம் ஏற்பட்டு விடுவதனால் இதயம் மிக வேகமாக துடிக்க ஆரம்பிக்கின்றது. இதன் மூலமும் இரத்தம் விரைவுப் படுத்தப்பட்டு விரைவாக விஷம் உடல் முழுதும் பரவி ஆபத்தையும் விரைவுப் படுத்துகின்றது.

பாம்பின் விஷம் செரிந்த புரோட்டீன்களினால் (Highly protin) ஆன பொருளாகும். இது நியூக்ரோ டாக்ஸிஸ் என்று அழைக்கப்படுகின்றது. புரதம் என்ற ஒரு சத்துப் பொருள் மனிதன் உயிர்வாழ மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். நாம் உண்ணக்கூடிய மாமிசம் மற்றும் தாவர எண்ணெய் போன்றவற்றில் புரதங்கள் அடங்கியுள்ளன. இருப்பினும் நம் உடல் அமைப்பை பொறுத்தவரை புரதமோ, வைட்டமின்களோ, அல்லது தாதுப் பெருள்களோ நம் வாயின் மூலம் உட்கொள்ளப்பட்டு வயிற்றில் செரிமானம் செய்யப்பட்டு நம் உடலுக்குத் தேவையான மற்றொருப் பொருளாக மாற்றப்பட்டு (metabolism) தேவையற்றவை அகற்றப்பட்டு அதன் பிறகுதான் இரத்தத்தில் கலக்க இயலும்.

ஆனால் பாம்பு கடிப்பதனால் விஷம் (highly protin) இரத்தத்தில் நேரடியாக கலப்பதனாலும் நம் உடலின் இயல்பிற்கு மாற்றமாக இருப்பதனாலும் நம் உடலின் திசுக்களும் கல்லீரலும் நரம்பு மண்டலங்களும் பாதிப்படைந்து மரணத்திற்கு வழி வகுக்கின்றது.

பாம்பின் விஷம் பல விதமான மருத்துவத்திற்கு பயனாகின்றது. பாம்பு கடிக்கான மருந்து தயாரிப்பிலும் (anti venom) வலி நிவாரணம், மூட்டுதசை மற்றும் கேன்சர் நோய்க்கான மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. எந்த ஒன்றையும் வீணுக்காக படைக்கவில்லை என்று சொல்லும் இறைவன் தன் வார்த்தைக்கு மாறு செய்யாதவன்.

**ஒரு கிராம் நல்ல பாம்புடைய விஷம் 50-க்கும் மேற்பட்ட மனிதர்களை கொல்லப் போதுமானதாகும். ஒரு முறை இவை கொட்டுவதனால் பிரயோகம் செய்யப்படும் விஷம் (ஏழு டன் எடைக் கொண்ட) மிகப்பெரிய யானையையே சில மணித்துளிகளில் மரணிக்கச் செய்யப் போதுமானதாகும்.**

மற்றுமொரு அம்சம் முட்டையிலிருந்து வெளிவந்த சிறிய பாம்புடைய விஷம் வீரியம் மிக்கப் பெரிய பாம்பின் விஷத்தை போன்றே எந்த விதத்திலும் குறையாத வீரியம் மிக்கதாகும்.

*....தொடர்ச்சி அடுத்த மாத இதழில்...(இன்ஷாஅல்லாஹ்)*

# குறுக்கெழுத்துப் போட்டி - 9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | | | | 2 | |
| 3 | | | | | ■ | | |
| | | 4 | ■ | ■ | ■ | | |
| | | ■ | | | | 5 | |
| | | 6 | | | | | 7 |
| | 8 | | | | | | 9 |
| | | | ■ | | ■ | ■ | ■ |
| ■ | 10 | 11 | | 12 | | | 13 |

## விதிமுறைகள்

1. விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர் Mr.Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628, Jeddah-21438 அல்லது suvanam@gmail.com என்கிற முகவரிக்கு **ஷஃபான்** மாதம் 30ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

2. விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை எழுதி அனுப்பவேண்டும்.

3. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி அல்லது தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

4. ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

5. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

6. ஆசிரியர் முடிவே இறுதியானது

## குறுக்கெழுத்துப் போட்டி – 7 க்கான பரிசு பெறுபவர் விபரம்

குறுக்கெழுத்துப் போட்டி - 7 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்...

**M.பிரேம் நவாஸ் கான்**

குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.

### இடமிருந்து வலம்

1. குர்ஆனில் குறிப்பிடப்பட்ட நபி (ஸல்) அவர்களின் உறவினர் பெயர் - நபியவர்களின் விரோதி (5)
3. கழிவறையிலிருந்து வெளியேறும் பொழுது ஓதும் துஆ (5)
6. நபிவழியை அரபியில் இவ்வாறு அழைப்பர் (4)
10. காய்கறிகளில் இதுவும் ஒரு வகை (4)

### வலமிருந்து இடம்

5. ரயில்கள் சந்திக்கும் இடம் (ஆங்கிலத்தில்) (4)
6. உலகத்தை கலக்கிய தற்போதய கடல் கொந்தளிப்பு (3)
9. உலக அதிசயங்களில் ஒன்றான இது தற்பொழுது யார் சொத்து என்ற சர்ச்சையில் உள்ளது (5)
13. கொழும்பு இந்நாட்டின் தலைநகரம் (4)

### மேலிருந்து கீழ்

1. நபி (ஸல்) அவர்களுடைய பெரிய தந்தையின் பெயர் (4)
2. காற்றில் இது உண்டு (5)
3. டில்லியிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடம் (6)
8. குர்ஆனில் அதிகமாக குறிப்பிடப்பட்ட நபியின் பெயர் (2)

### கீழிலிருந்து மேல்

4. நபி(ஸல்) அவர்களுக்கு முதல் வஹி வந்த குகை (2)
7. கடந்த ஜமாத்துல் ஆகிர் இதழில் அல்லாஹ்வின் படைப்புகள் என்ற பகுதியில் இதைப் பற்றி அறிந்துக் கொண்டோம் - கடைசி எழுத்து விடுபட்டுள்ளது (6)
11. தொழுகையில் முதுகைச் சீராகவும், இரு கைகளை முழங்கால்களில் ஊன்றி இருக்கும் நிலையின் பெயர் (3)
12. தண்டனை பெற்று சிறையில் இருப்பவர்கள் இவ்வாறு அழைக்கப்படுவர் (2)

## குறுக்கெழுத்துப் போட்டி - 7 க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ[1] | மீ | ன் | தே[2] | ■ | ■ | ம் | க | க் | தூ[3] |
| ஸ | ■ | தா | ■ | இ[4] | ■ | ■ | ■ | ■ | த் |
| ர் | ■ | த் | ■ | ந் | தா | யி | கா | ல் | து[5] |
| ■ | ■ | இ[6] | ஸ் | தி | ஹா | ரா | ■ | ■ | க் |
| ■ | சை | ■ | ■ | ■ | ■ | ■ | கை[7] | ■ | கு |
| டி | இ[8] | ஃ | தி | கா | ப் | ■ | ப் | தா[9] | டி |
| ■ | ■ | ன் | ■ | க் | ■ | ■ | ப | ■ | ■ |
| ■ | ■ | ட | ■ | ப[10] | து | ■ | ந் | ■ | ப[11] |
| ■ | ■ | வீ | ■ | ■ | ஹ | ■ | து | ■ | ண |
| ம் | லை | சு[12] | மு | ம் | உ[13] | ம[14] | ர | ண | ம் |